# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்

# பாராளுமன்றம்

---

# 1982 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க,

# பகிரங்க ஆதனத்துக்கெதிரான

# தவறுகள் சட்டம்

---

*[1982, மார்ச்சு மாதம் 25 ஆந் தேதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது.]*

*அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது.*

---

1982, மார்ச்சு மாதம் 26 ஆம் தேதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்த மானப் பத்திரிகையின் II ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது.

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.

கொழும்பு அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக்கொள்ளலாம்.

விலை: சதம் 45 — தபாற் செலவு: சதம் 50

# 1982 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க, பகிரங்க ஆதனத்துக் கெதிரான தவறுகள் சட்டம்

[1982, மார்ச்சு மாதம் 25 ஆந் தேதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது]

ச. வ.—ஓ. 92/79

1336

**பகிரங்க ஆதனம் தொடர்பாகப் புரியப்பட்ட குறித்த சில தவறுகள் தொடர்பிலும் அதனோடு தொடர்புபட்ட அல்லது அதன் இடைநேர்விளைவான கருமங்களுக்கு ஏற்பாடு செய்வதற்குமானதொரு சட்டம்.**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :—

சுருக்கப் பெயர்.

**1.** இச்சட்டமானது, 1982 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க, பகிரங்க ஆதனத்துக்கெதிரான தவறுகள் சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம்.

பகிரங்க ஆதனத்துக்குச் சொத்தழித்தலைப் புரிதல்.

**2.** பகிரங்க ஆதனத்திற்குச் சொத்தழித்தலென்னும் தவறைப் புரிகின்ற எவரேனும் ஆள், தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டுமென்பதுடன், குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டதன்மேல், ஓராண்டுக்குக் குறையாததும் ஆனால் இருபது ஆண்டுகளை விஞ்சாததுமான ஒரு காலத்துக்கான இருவகையிலொருவகை மறியற்றண்டனையினாலும், அத்துடன் ஆயிரம் ரூபா அல்லது அத்தகைய ஆதனத்துக்கு ஏற்பட்ட இழப்பு அல்லது சேதத்துக்கான தொகையின் மும்மடங்கு ஆகியவற்றுள் எது கூடியதோ, அக்குற்றப்பணமொன்றினாலும் தண்டிக்கப்படுதலும் வேண்டும்.

பகிரங்க ஆதனத்தைத் திருடுதல்.

**3.** பகிரங்க ஆதனத்தைத் திருடுதலென்னும் தவறைப் புரிகின்ற எவரேனும் ஆள், தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டுமென்பதுடன், குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டதன்மேல், ஓராண்டுக்குக் குறையாததும் ஆனால் இருபது ஆண்டுகளை விஞ்சாததுமான ஒரு காலத்துக்கான இருவகையிலொருவகை மறியற்றண்டனையினாலும், அத்துடன் ஆயிரம் ரூபா அல்லது எந்த ஆதனம் தொடர்பில் அத்தகைய தவறு புரியப்பட்டதோ அந்த ஆதனத்தினது பெறுமதியின் மும்மடங்கு ஆகியவற்றுள் எது கூடியதோ அக்குற்றப்பணமொன்றினாலும் தண்டிக்கப்படுதலும் வேண்டும்.

பகிரங்க ஆதனத்தைக் கொள்ளை புரிதல்.

**4.** பகிரங்க ஆதனத்தைக் கொள்ளை புரிதலென்னும் தவறைப் புரிகின்ற எவரேனும் ஆள், தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டுமென்பதுடன், குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டதன்மேல், ஓராண்டுக்குக் குறையாததும் ஆனால் இருபது ஆண்டுகளை விஞ்சாததுமான ஒரு காலத்துக்கான இருவகையிலொருவகை மறியற்றண்டனையினாலும், அத்துடன் ஆயிரம் ரூபா அல்லது எந்த ஆதனம் தொடர்பில் அத்தகைய தவறு புரியப்பட்டதோ அந்த ஆதனத்தினது பெறுமதியின் மும்மடங்கு ஆகியவற்றுள் எது கூடியதோ அக்குற்றப்பணமொன்றினாலும் தண்டிக்கப்படுதலும் வேண்டும்.

நேர்மையற்ற முறையில் கையாடல் செய்தல், குற்றமுறையான நம்பிக்கை மீறல், ஏமாற்று, பொய்யாவணப் புனைதல், கணக்குகள் பொய்ப்பித்தல் என்பன.

**5.** (1) ஏதேனும் அசைவுள்ள பகிரங்க ஆதனத்தை நேர்மையற்ற முறையில் கையாடல் செய்யும் அல்லது அதனைத் தனது சொந்தப் பயன்பாட்டுக்கென மாற்றிக்கொள்ளும் அல்லது ஏதேனும் அசைவுள்ள பகிரங்க ஆதனம் தொடர்பில் குற்றமுறையான நம்பிக்கை மீறலாகிய தவறினைப் புரியும் எவரேனுமாள், தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டுமென்பதுடன், குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டதன்மீது, ஓராண்டுக்குக் குறையாத ஆனால் இருபது ஆண்டுகளை விஞ்சாதவொரு காலத்துக்கான இருவகையிலொருவகை மறியற்றண்டனையினாலும் அத்துடன், ஆயிரம் ரூபாத் தொகை அல்லது எந்த ஆதனம் தொடர்பில் அத்தகைய தவறு புரியப்பட்டதோ அந்த ஆதனத்தினது பெறுமதியின் மும்மடங்கான

1—ஏ 61111—7,000 (82/01)

தொகை ஆகிய இந்த இரு தொகைகளில் எது கூடியதாயுள்ளதோ அத் தொகையளவிலான குற்றப்பணமொன்றினுலும் தண்டிக்கப்படுதல் வேண்டும்.

(2) பகிரங்க ஆதனம் தொடர்பில், ஏமாற்று, பொய்யாவணம் புனைதல் அல்லது கணக்குகளைப் பொய்ப்பித்தல் என்னும் தவறினைப் புரியும் எவரேனுமாள், இச் சட்டத்தின்கீழ் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டுமென்பதுடன், குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டதன்மீது, ஓராண்டுக்குக் குறையாத ஆனால் இருபது ஆண்டுகளை விஞ்சாதவொரு காலத்துக்கான இருவகையிலொருவகை மறியற்றண்டனையினுலும் அத்துடன், ஆயிரம் ரூபாத் தொகை அல்லது எது தொடர்பில் அத்தகைய தவறு புரியப்பட்டதோ அதற்குரிய தொகையின் மும்மடங்கான தொகை ஆகிய இந்த இரு தொகைகளில் எது கூடியதாயுள்ளதோ அத்தொகையளவிலான குற்றப்பணமொன்றினுலும் தண்டிக்கப்படுதல் வேண்டும்.

**ஆதனம் இழப்பிக்கப்படுவதன் மூலம் குற்றப்பணத்தை அறவிடுதல்.**

6. இரண்டாம், 3 ஆம், 4 ஆம், 5 ஆம் அல்லது 10 ஆம் பிரிவின் கீழ் எவரேனுமாள்மீது விதிக்கப்பட்ட குற்றப்பணமானது செலுத்தத் தவறப்படுமிடத்து, நீதிமன்றமானது, அத்தகைய குற்றப்பணத்தொகையின் பெறுமதிக்குச் சமமானதென அது கருதுவதான தவறுகையாளரின் அசைவுள்ளதும் அசைவற்றதும் ஆன அத்தகைய எல்லாம் குடியரசுக்கு இழப்பிக்கப்படுதல் வேண்டுமெனக் கட்டளையிடலாம் என்பதுடன், அத்தகைய குற்றப்பணத்தொகையை விஞ்சுவதாகவுள்ளதும், அத்தகைய ஆதனத்தின் விற்பனையின்மீது தேறப்படுவதுமான ஏதேனும் பணத் தொகை அத்தகைய ஆளுக்கு மீளளிக்கப்படுதலும் வேண்டும்.

**சமுதாயச் சேவைக் கட்டளை.**

7. ஆறும் பிரிவின்கீழ் ஆதனத்தை இழப்பித்தலானது நடைமுறைச் சாத்தியமற்றதாயுள்ளவிடத்து அல்லது உசிதமற்றதாயுள்ளவிடத்து, நீதிமன்றமானது, அத்தகைய இழப்பித்தற் கட்டளையை ஆக்குவதற்குப் பதிலாக 1979 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, குற்றவியல் நடவடிக்கை முறைச் சட்டக்கோவைச் சட்டத்தின் 18 ஆம் பிரிவின்கீழ் சமுதாயச் சேவைக் கட்டளையொன்றை ஆக்கலாம்.

**பிணை அளித்தல் தொடர்பான ஏற்பாடுகள்.**

8. (1) ஆளெவரும் தானகச் சரணடையுமிடத்து, அல்லது இச்சட்டத்தின்கீழ் அவர் தவறொன்றைப் புரிந்திருக்கிறர் அல்லது புரிதலில் தொடர்புடையவராயிருந்திருக்கிறர் அல்லது புரிந்திருப்பதாக அல்லது புரிவதில் தொடர்புடையவராயிருந்திருப்பதாக சந்தேகிக்கப்படுகிறர் என்ற சார்த்துகையொன்றின்மீது கைதுசெய்யப்பட்டு கொணரப்படுமிடத்து பிணை தொடர்பாக, 1979 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவைச் சட்டத்தின் ஏற்பாடுகள் ஏற்புடையனவாதல் வேண்டும் :

ஆயின், எவ்வாறுயினும், எவ்விடயப்பொருள் தொடர்பில் தவறு புரியப்பட்டதோ, அவ்விடயப்பொருளின் பெறுமதி ஐயாயிரம் ரூபாவை விஞ்சுகின்றதெனப் பொலிசு உதவிக் கண்காணிப்பாளர் தரத்துக்குக் குறையாத தரத்திலுள்ள நிரற்படுத்தப்பட்ட அலுவலரொருவர் அத்தாட்சிப்படுத்துமிடத்து, விளக்கம் முடிவுறும்வரை அத்தகைய ஆள் விளக்கமறியலில் வைத்திருக்கப்படுதல் வேண்டும். பிணையில் விடுவதற்கான காரணங்களைப் பதிந்து கொண்டதன்பின்னர் அத்தகைய ஆளைப் பிணையில் விடுவதற்கு நீதிமன்றமானது புறநீங்கலான சந்தர்ப்பங்களில் தகுதிவாய்ந்ததாதல் வேண்டும்.

(2) இச்சட்டத்தின்கீழான ஏதேனும் தவறுக்கு நீதிமன்றத்தினால் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்ட ஆளொவ்வொருவரும், அவரது குற்றத்தீர்ப்புக்கு எதிராக அல்லது அவருக்கு விதிக்கப்பட்ட தண்டனைத்தீர்ப்புக்கு எதிராக மேன்முறையீட்டு மனுவொன்றைச் சமர்ப்பித்துள்ளாரென்பது எவ்வாறிருப்பினும், மேன்முறையீடு முடிவுறுத்தப்படும்வரை விளக்கமறியலில் வைத்திருக்கப்படுதல் வேண்டும் :

ஆயின், எவ்வாறாயினும், பிணையில் விடுவதற்கான காரணங்களைப் பதிந்துகொண்டதன்பின்னர் அத்தகைய ஆளை புறநீங்கலான சந்தர்ப்பங்களில் பிணையில் விடுவதற்கு அத்தகைய நீதிமன்றம் தகுதிவாய்ந்ததாதல் வேண்டும்.

9. இச்சட்டத்தின்கீழான ஏதேனும் தவறுக்குக் குற்றஞ்சாட்டப்பட்ட எவரேனும் ஆளின் விளக்கத்துக்கும், அத்துடன் அத்தகைய ஏதேனும் தவறின்மீதான குற்றத்தீர்ப்பிலிருந்தும், அத்தகைய குற்றத்தீர்ப்பின்மீது விதிக்கப்பட்ட தண்டனைத்தீர்ப்பிலிருந்தும் எழுவதான ஏதேனும் மேன்முறையீட்டின் கேட்புக்கும் நீதிமன்றமானது முந்துரிமையளித்தல் வேண்டும்.

இச்சட்டத்தின்கீழான தவறுகளின் மீதான விளக்கத்தின் கேட்புக்கும் குற்றத் தீர்ப்புகளிலிருந்து எழுவனவான மேன்முறையீடுகளுக்கும் முந்துரிமை அளிக்கப்படுதல்.

10. இச்சட்டத்தின்கீழ் தண்டிக்கப்படற்பாலதான தவறொன்றைப் புரிய எத்தனிக்கின்றவரும் அல்லது அத்தகைய தவறொன்றைப் புரிவிக்க எத்தனிக்கின்றவரும், அத்துடன் அத்தகைய எத்தனிப்பில் தவறு புரியப்படுதலை முன்னிட்டு ஏதேனும் செயலைச் செய்கின்றவருமான எவரேனும் ஆள், அத்தகைய தவறுக்கென ஏற்பாடு செய்யப்பட்டுள்ளவாறான அத்தகைய இருவகையிலொருவகை மறியற்றண்டனையினாலும், அத்துடன் அத்தகைய தவறுக்கென ஏற்பாடு செய்யப்பட்டுள்ளவாறான அத்தகைய குற்றப்பணத்தினாலும் தண்டிக்கப்படுதல் வேண்டும்.

தவறுகளைப் புரிய எத்தனித்தல்.

11. நீதிமன்றத்தின் அபிப்பிராயத்தில் பதினாறு வயதுக்குக் குறைந்தவராயிருக்கின்ற ஆளொருவர் 2 ஆம், 3 ஆம், 4 ஆம் அல்லது 5 ஆம் பிரிவின்கீழ் தவறொன்றைப் புரியுமிடத்து அல்லது 10 ஆம் பிரிவின்கீழ் தவறொன்றைப் புரிய எத்தனிக்கின்ற அல்லது தவறொன்று புரியச் செய்விக்கின்றவிடத்து, நீதிமன்றம், அந்தத் தவறுக்கெனத் தரப்பட்ட குறைந்த தண்டனையைப் பொருட்படுத்தாது தண்டனையொன்றை விதிக்கத் தற்றுணிபு கொண்டிருத்தல் வேண்டும்.

பதினாறு வயதுக்குக் கீழ்ப்பட்ட ஆட்களுக்குத் தண்டனை.

பொருள் கோடல்.

12. இச்சட்டத்தில் சந்தருப்பம் வேறுவகையாகத் தேவைப்படுத்தினு லொழிய—

"வங்கி" என்பது—

(அ) கடன்கள், முற்பணங்கள் அல்லது முதலீடுகள் வழங்குகின்றதும், அல்லது பொதுமக்களிடமிருந்து பணவைப்புகளை ஏற்றுக்கொள் ளுகின்றதும் அரசாங்கத்தின் சார்பில் செயற்படுகின்றதுமான ஏதேனும் முகவராண்மை அல்லது நிறுவனம் (அது எழுத்தி லான ஏதேனும் சட்டத்தின்கீழ் தாபிக்கப்பட்டிருப்பினுஞ்சரி வேறுவகையாகத் தாபிக்கப்பட்டிருப்பினுஞ்சரி) எனவும், அத் துடன்

(ஆ) இச்சட்டத்தின் நோக்கங்களுக்காக வங்கியொன்றாகவிருக்கின்ற தென கசெற்றில் வெளியிடப்பட்ட கட்டளைமூலம் நிதியெனும் விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சரினால் வெளியிடப்பட்ட வேறெவரேனும் ஆள் அல்லது வேறேதேனும் ஆட்கள் குழு என வும்,

பொருளாகும்;

"ஏமாற்றுகை" என்பது, தண்டனைச் சட்டக்கோவையிலுள்ள அதே பொருளைக் கொண்டுள்ளது;

"கூட்டுறவுச் சங்கம்" என்பது, தேசிய அரசுப் பேரவையின் 1972 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்க, கூட்டுறவுச் சங்கங்கள் சட்டத்தின்கீழ் பதிவு செய்யப்பட்ட அல்லது பதிவு செய்யப்பட்டதாகக் கருதப் பட்ட ஏதேனும் சங்கம் எனப் பொருளாகும்;

"கூட்டுறவுச் சமாசம்" என்பது, தேசிய அரசுப் பேரவையின் 1972 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்க, கூட்டுறவுச் சங்கங்கள் சட்டத்தின்கீழ் பதிவு செய்யப்பட்ட அல்லது பதிவு செய்யப்பட்டதாகக் கரு தப்பட்ட ஏதேனும் சமாசம் எனப் பொருளாகும்;

"குற்றமுறையான நம்பிக்கைத் துரோகம்" என்பது, தண்டனைச் சட் டக்கோவையிலுள்ள அதே பொருளைக் கொண்டுள்ளது;

"நேர்மையற்ற முறையில்" என்பது, தண்டனைச் சட்டக்கோவையி லுள்ள அதே பொருளைக் கொண்டுள்ளது;

"பொய்ப்பித்தல்" என்பது, தண்டனைச் சட்டக்கோவையிலுள்ள அதே பொருளைக் கொண்டுள்ளது;

"பொய்யாவணம் புனைதல்" என்பது, தண்டனைச் சட்டக்கோவையி லுள்ள அதே பொருளைக் கொண்டுள்ளது;

"சொத்தழித்தல்" என்பது, தண்டனைச் சட்டக்கோவையிலுள்ள அதே பொருளைக் கொண்டுள்ளது;

"பகிரங்கக் கூட்டுத்தாபனம்" என்பது, கம்பனிகள் கட்டளைச் சட்டம் தவிர்ந்த எழுத்திலான வேறு ஏதேனும் சட்டத்தினால் அல்லது சட்டத்தின்கீழ் தாபிக்கப்பட்டுள்ளதும், அல்லது தாபிக்கப்படுவதும், மானியம் என்ற வகையில், கடன் என்ற வகையில் அல்லது வேறுவகையில் அரசாங்கத்தினால் முழுக்க முழுக்க அல்லது பகுதியளவில் உதவப்பட்ட மூலதனத்தை அல்லது நிதியை உடையதுமான ஏதேனும் கூட்டுத்தாபனம், சபை அல்லது வேறு குழு எனப் பொருளாகும்;

"பகிரங்க ஆதனம்" என்பது, அரசாங்கத்தின், ஏதேனும் திணைக்களத்தின், நியதிச்சட்டமுறையான சபையின், பகிரங்கக் கூட்டுத்தாபனத்தின், வங்கியின், கூட்டுறவுச் சங்கத்தின் அல்லது கூட்டுறவுச் சமாசத்தின் ஆதனம் எனப் பொருளாகும்;

"கொள்ளை" என்பது, தண்டனைச் சட்டக்கோவையிலுள்ள அதே பொருளைக் கொண்டுள்ளது;

"திருட்டு" என்பது, தண்டனைச் சட்டக்கோவையிலுள்ள அதே பொருளைக் கொண்டுள்ளது.

பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் வருடாந்தச் சந்தா (உள்நாடு) ரூபா 150, (வெளிநாடு) ரூபா 200, ஒவ்வோராண்டும் டிசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்கு முன் எதிர் வரும் ஆண்டுக்காய சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலுவலகம், த. பெ. இல. 500, கொழும்பு 1 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்.